தொகுதி 8] [பகுதி 2

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ௵ வைகாசி ௴

MAY 1943

பிரசுர கர்த்தர்கள் :


தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

*Regd. No. M. 3473*




# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் டீயை மிக விரும்புவதேன்? டீ மூளைக்கு ஊக்கமளித்து புதிய புதிய எண்ணங்களை வெளியிட உதவுவதால் தான். மற்றெந்த பானத்திற்குமில்லாத ஓர் விசேஷ குணம் டீக்கு உண்டு. அது மூளையை சுறுசுறுப்பாக்கி கற்பனை சக்தியை விருத்தி செய்யும் குணமே. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.

ஊக்கமளிக்க





டீ தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# இந்தியன் டீ

சர்வ சாதாரணமான பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன்
போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V.


**Printed by** K. Sadagopachariar **at the Liberty Press, 10,** Linghi Chetty St., **Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.**

# பொருளடக்கம்


பக்கம்

1. 33-வது மாகாணக் கல்வி மகாநாடு .... .... 307

—தலைவர், குருகுல தர்மாசார்ய ஸ்ரீ கே. ரங்கசாமி அய்யங்கார், பி. ஏ., பி. எல்., எல். டி.

2. செய்தித் திரட்டு .... .... .... 317

3. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 325


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ, அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதாரர்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 45.
செங்கற்பட்டு — Ch. 9.
வட ஆற்காடு — NA, 35, 45, 59, 65.
தென்னாற்காடு — SA. 81.
தஞ்சாவூர் — Tan. 2, 8, 13, 40, 50A, 76, 77.
திருச்சி — Tri. 2.
ராமனாதபுரம் — Rd. 55, 56, 64.
மதுரை — Md. 2, 23, 28.
திருநெல்வேலி — Tin. 30.
சேலம் — S. 5, 17, 56, 66.
கோயமுத்தூர் — Co. 2, 8, 9, 13, 38.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 8 | 1943 ஸு மே மீ<br>ஸுபாநு ஸு வைகாசி மீ | பகுதி 2 |
|---|---|---|

## 33-வது மாகாணக் கல்வி மகாநாடு

தலைவர், குருகுல தர்மாசார்ய ஸ்ரீ கே. ரங்கசாமி அய்யங்கார்,
பி. ஏ., பி. எல்., எல். டி., தலைமை உபாத்தியாயர்,
ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

## உபந்யாஸப் பகுதிகளின் சாரம்

### யுத்த நிலைமையும், அதனால் மாகாணக் கல்விக்கு ஏற்பட்ட விளைவும்

ஜப்பான் யுத்த அரங்கில் நுழைந்தது முதற்கொண்டு யுத்த பூதம் தன் விகார உருவத்துடன் ஆகாயத்தை அளாவி நம் இந்திய நாட்டை மருட்டி வருகிறது. 1942-ம் வருஷ ஆரம்பத்தில் சில மாதங்கள் மக்கள் அப் பூதத்தை நினைத்து பெரும் பயம் கொண்டனர். கடலையடுத்த பாகங்களிலெல்லாம் வருங்கால கல்வி நிலை எவ்வாருமோ என்று கலக்கம் ஏற்பட்டது. அரசாங்க உதவிபெறும் பள்ளிக்கூடங்களெல்லாம் கவலைக்கிருப்பிடங்களாயின. மாணவர்கள் உள்நாட்டுக்குப் பயந்தோடினர். கோடை விடுமுறை கழிந்தபின் அவர்கள் தத்தம் பள்ளிக்கூடங்களுக்குத் திரும்பி வருவாரோ வாராரோ என்ற சந்தேகந் தோன்றியது; பொருள் வருவாயின் உண்மை நிலைமையை யறிய முடியவில்லை. பள்ளிக்கூடப் பரிபாலகர்க்குக் கவலை மிகுந்தது. இத்தகைய நெருக்கடியில் கலாசாலைகளைப் பரிபாலிப்போரும் போதகாசிரியர்களும் ஏகோபித்துக் கலந்து ஆலோசிப்பதென மெய்யறிவு பெற்றனர். அதிகாரிகள்

சேர்த்து வைத்திருந்த பொருளில் ஒரு பகுதியைச் செலவிடத் தயாரா யிருந்தனர்; போதகாசிரியர்கள் கிடைத்த அளவுகொண்டு திருப்தி யடையச் சித்தமாயினர். எனினும், சில பள்ளிக்கூட அதிகாரிகள் தங் கள் செயலினால் பின்பு நேரும் தீய விளைவுகளைச் சிறிதும் கவனியாது, சட்டப்படி நடப்பதெனத் தீர்மானித்து பல்லாண்டுகளாக உண்மை உழைப்பாளிகளாயிற்றே என்று யோசியாது போதகாசிரியர்களை வேலையிலிருந்து நீக்க உத்திரவு பிறப்பித்தனர். இது மிகவும் வருந்தத் தக்கது. இந்நிலையில் போதகாசிரியர் இடுக்கண் களைவது அரசாங்கத் தாரின் பொறுப்பு ஆயிற்று. கல்வி இலாகா டைரெக்டர் ஸர் ஆர். எம். ஸ்டேதம் துரையவர்கள் தம் உத்தியோக கடமைகளைச் செலுத்துவதில் மேற்கண்ட பொறுப்பை நன்குணர்ந்தவரென காட்டிக்கொண்டார். தம் உதவியை நாடிவந்த கலாசாலை அதிகாரிகளுக்கும், உபாத்தியாயச் சங்கங்களுக்கும் தாராளமாகப் பொருளுதவி செய்வதாக வாக்களித்து அச்சத்தைப் போக்கினர். யுத்த பயத்தால் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக ஒரு உபாத்தியாயரையும் வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவை காலதாமதமின்றி பிறப்பித்து உபாத்தி யாயர்களுக்கு ஆதரவு அளித்தார் டைரெக்டர். ஆதலால் அவருக்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். பண நெருக் கடி ஒருபுறமிருக்க மாணவ மாணவிகளுக்குக் கல்வி போதிப்பது எப்படி என்ற கவலை அதிகரித்தது. அபாயஸ்தானங்களில் அவசியம் தங்கும் மாணவர்களுக்கும், கடற்கரையையடுத்த பிரதேசத்திலிருந்து உள்நாட்டுக்குப் போகும் சிறுவர்களுக்கும் எவ்வாறாயினும் கல்விபயிற்று விக்கவேண்டும் என்று தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அரசாங்கத் தார், நகரக் கலாசாலையதிகாரிகள் ஆகிய இவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையால் நல்ல வேளையாய்ச் சென்ற வருஷம் கல்வி போதிப்பதில் இடையூறொன்றும் தோன்றவில்லை, இத்தகைய அபாய காலம் நீங்கும் வரையில் அரசாங்கத்தார் பொருளுதவி செய்வதாய் உறுதி கூறவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். இதே சந்தர்ப்பத்தில் இங்கிலாந் தில் போர்ட் ஆப் எடுகேஷனின் பார்லிமெண்டரி காரியதரிசி கூறியது நோக்கத்தக்கது. அஃதாவது, "எதிரிகளின் தாக்குதலால் தத்தம் நகரங் களை விட்டுச் சிறுவர்கள் வெளியேற நேர்ந்தாலும், இங்கிலாந்திலும், வேல்ஸிலும் நூற்றுக்கு 93·2 பேர் முறைப்படி கல்வி பயிற்சிபெற்றனர். இக்கால அபாய நிலையைக் காரணமாகக் கொண்டு எந்தக் குழந்தைக்கும் பிறப்புரிமையான கல்விப் பயிற்சியைத் தடைப்படுத்தக் கூடாது," என்பதே.

## யுத்தத்திற்குப் பிற்காலக் கல்வி

ஒரு தலைமுறையில் இருமுறை மானிடரை வருத்திய கோர யுத் தம் மறுபடியும் நேராவண்ணம் யுத்தத்திற்குப் பின் எத்தகைய கல்வி போதிக்கவேண்டும்? என்ற வினாவிற்கு முற்போக்கடைந்த ஒவ்வொரு

தேசத்திலும் மெய்யறிவாளர் விடை கூற முயலுகின்றனர். இங்கிலாந்து யுத்தத்தில் மும்முறமாக நுழைந்திருக்கிறது; எனினும் போர்டு ஆப்எடுகேஷன் யுத்தத்திற்குப்பின் கல்வி முறையைப்பற்றி ஆலோசித்து சீர்திருத்தங்களை முடிவு கட்டியிருக்கிறது. சீன தேசத்துக் கல்வி நிபுணர் ஒருவர் எதிரிகளைத் தாக்குவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் திருத்தமான முறையில் கல்வி கற்பிக்கும் ஏற்பாடு செய்வது என்று கூறுகிறார். இவ்விஷயத்தில் ப்ரிட்டன், சீனு ஆகிய இத்தேசங்களை பின்பற்றுவதை விட சிறந்தது வேறு இல்லை. ஆதலால் வருங்கால நிலையை உணர்ந்து நம் நாட்டில் கல்வித் திட்டத்தை வகுப்பது அவசியம்.

கல்வி சம்பந்தமாய் அடிப்படையான இரண்டு கொள்கைகளை நான் வற்புறுத்திக் கூறுவேன். அவற்றில் முதலாவது, ஒவ்வொரு குழந்தையிடமும் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வளர்த்து வெளிப்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தல். அப்படிச் செய்தால் தான் ஏற்ற காலத்தில் சிறுவன் குடிகளின் விதி விலக்குகளை உணர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று நாட்டின் முன்னேற்றத்திற்குத் தன்னுல் இயன்றவற்றைச் செய்வான். இரண்டாவது, கலாசாரத்திற்கும் (**culture**) தொழில் முறைக் கல்விக்கும் இயல்பான பொருத்தம் உண்டென்பதை உணர்ந்தொழுகுதல். மனவன்மை, தெளிந்த யோசனை, சமயோசித புத்தி, தனக்கெனத் தனித்துத் தோன்றும் யோசனுசக்தி ஆகிய இவ்வளவும் கைத்திறனும் உற்று நோக்கும் சக்தியும் எந்த அளவுக்குச் சிறுவரிடம் பெருகுகின்றனவோ அந்த அளவுக்கே அவரிடம் தோன்றுகின்றன என்று ஆராய்ச்சியாளர் அனுபவசித்தாந்தமாகக் கூறுகிறார்கள். ஆதலால் சித்திரப் பழக்கமும், கைத்தொழில் திறனும் பெருகுவதற்கேற்றவாறு கல்வி முறையைத் திருத்தி யமைப்பதிலும் சிறந்த சீர்திருத்தம் வேறென்றில்லை. அத்தகைய கல்வி முறையின் சிறப்பியல்பு யாதெனில் கெடுத்தழிக்கும் தன்மையை அழுத்தி, புதியன்வற்றை ஆக்கும் சக்தியை வளர்க்கும். வர்தா கல்வி திட்டத்தின் சிறப்பியல்பு இதுவேயாகும். அதன் மூலபுருஷரான மஹாத்மா காந்தி பரமாசாரியர் ஆவர். எண்ணிறந்த இந்திய மக்களின் சுக துக்கங்களையும், மனப்பான்மையையும் ஹிருதயப் போக்கையும் அவரைக் காட்டிலும் நன்குணரந்தவர் எவர்? வர்தா திட்டத்தை வகுத்துரைத்தோர் மிக்க மேதாவிகள்; உலகத்தில் பல தேசங்களில் சஞ்சரித்து அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள்; பல கல்வி முறைகளை ஆராய்ந்து தெளிந்த சிந்தையுடையவர்கள். நாட்டின் நலன் ஒன்றையே கருதுபவர்; ஆதலால் வர்தா கல்வி திட்டம் நமக்கோர் ரக்ஷகமாகும். அதன் அடிப்படையான கொள்கைகள் நாடெங்கும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. சில மாகாணங்களில் அத்திட்டம் சில மாறுதலுடனே ஒரு மாறுதலும் இல்லாமலோ நல்விளைவுடன் கையாளப்பட்டு வருகிறது. எனினும் அது கல்வி முறையின் அஸ்திவாரம். அதனை

அடிகோலி புதிய கல்வி திட்டத்தை எழுப்பவேண்டும். அப்படி எழுப்பு முன் பழைய கட்டடத்தின் பெரும் பகுதிகள் இடிந்து தகர்ப் புண்டுபோம். நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் மிகப் பலர். இவ்வறியாமையை யொழிக்க எல்லோரும் ஒன்றுகூடி முயற்சிக்க வேண்டும். இங்குமங்கும் முயற்சித்தால் போதாது. ஆசேது ஹிமா சலம் வரை எல்லாவிடங்களிலும் எழுத்தறியாப் பிணியைப் போக்க வழி தேடவேண்டும். சீனவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை 75% இருந்ததாம். முயன்று அதை 36%க்கு குறைத்திருப் பதாகச் சீனக் கல்வி யாத்திர சபையின் தலைவரான டாக்டர் கூ என்ப வர் சென்னைக்கு விஜயம் செய்தபோது கூறியது ஞாபகப்படுத்திக்கொள் ளத்தக்கது. கல்வி சீர்திருத்தம் எத்தன்மையதாயினும், தேசத்தின் பாதுகாப்பை முன்னிட்டு ராணுவப் பயிற்சி நம் சிறுவர்களுக்குத் தர வேண்டியது அவசியமாகும்.

தென் இந்திய உபாத்தியாயச் சங்கத்தின் கமிட்டியார் யுத்தத் திற்குப் பின் கல்வி முறை எவ்வாறு இருக்கவேண்டுமென்று ஆலோ சித்து ஏற்ற தலைப்புகளுடன் வகுத்துக் கூறியுள்ளார்கள். இம்மகாநாடு அதைப்பற்றிச் சர்ச்சைசெய்து ஒரு முடிவுக்கு வர அவர்கள் உதவி பேருதவியாகும். கமிட்டியார் பல ப்ரச்னைகளுள் பொருளுதவி செய்வ தில் அரசாங்கத்தாரின் பொறுப்பை முக்கியமாகக் கூறுகிறார்கள். இதில் அபிப்பிராய பேதம் இருக்க இடமில்லை. பிற்காலக் கல்வி அபி விருத்தி அடையவேண்டுமானால் அரசாங்கத்தார் இப்பொழுது கொடுப் பதைப்போல் குறைவாய்ப் பொருளுதவி செய்தல் போதாது, பன் மடங்கு அதிகப்படுத்தித் தரவேண்டும். போதகாசிரியரைக் காத்து அவர் சோற்றுத் துணிகளுக்கு கஷ்டப்படாமல் இருக்கச் செய்வது அர சாங்கத்தாரின் கடமை. இதில் ஒரு சந்தேகத்திற்குச் சிறிதும் இட மில்லை. ராஜாங்க வருமானத்தில் உபாத்தியாயர் சம்பளத்துக்கு முதல் உரிமை கொடுக்கப்பட வேண்டும். தாயைப் பேணி போற்று வீடு வீடாமோ? போதகாசிரியரைப் பேணு அரசாங்கம் தன் முதல் கடமை யைச் செலுத்தத் தவறியதாகும். போஷாக்கு இல்லாத தாய் தன் மக வுக்கு எங்ஙனம் பாலூட்டக் கூடும்? அதைப்போலவே அரை வயிறுண் ணும் போதகாசிரியர் மாணவனுக் கெவ்வாறு அறிவைப் புகட்டக் கூடும்? குடும்பத்தில் சோற்றுத் துணிக்கும் போதிய அளவு சம்பளமா யினும் மிக்க அவசியம். இதை யுணர்ந்தே தென் இந்திய உபாத்தியாயச் சங்கம் (S. I. T. U.) இடைவிடாது போதகாசிரியரின் சம்பளம், பதவி, வேலையிலுள்ள வசதிகள் முதலியவற்றைக் கவனித்து வருகிறது அதன் முயற்சி சிறிது பயனைத் தந்திருக்கிறதென்றாலும், சம்பளத்தையும், கௌரவத்தையும் உயர்த்த இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக் கிறது. பொதுவாக ஆசிரியர்களின் சம்பளக் குறைவு, அதிலும் ஆரம்ப ஆசிரியருக்குக் கொடுக்கும் சம்பளம் மிக்க கேவலம். எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் குறைந்தது செகண்டரி கிரேடாயிருக்க வேண்டும்

என்று நான் நெடுங்காலமாக நினைத்து வருகிறேன். அவர்களுக்குக் குறைந்தது நகரத்தில் ரூ. 40-ம் மற்ற விடங்களில் ரூ. 35-ம் தரவேண்டும். சார்ஜெண்ட் கமிட்டியார் இப்பொழுது ஆசிரியரின் சம்பளம் பரிகாஸத்திற்கிடமாகும்படி அவ்வளவு கேவலமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நேஷனல் கவர்ன்மெண்ட் ஏற்பட்டால் அது ஆசிரியர்களுக்குத் தன் கடமையைச் சரிவரச் செலுத்தும் என்று உறுதியாய் நான் நம்புகிறேன். அன்றியும், இப்பொழுது வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் வெவ்வேறு விதமாய் இருக்கும் சம்பள விகிதங்களைப் போக்கி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒரே விதமான ரேட்டுகள் இருக்குமாறும், ஒரே விதிகளுக்குட்படுமாறும் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன். இப்படி சம்பளம், வேலை நிபந்தனைகள் முதலியன சீர்திருத்தம் பெற்றால் ஆசிரியர்கள் கவலையில்லாமல் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தவராவார்கள். அவ்வித நிலையிலுள்ள ஆசிரியக் கூட்டமே ஒரு நாட்டின் நிதி.

## சுகாதாரக் கல்வி

உடலோம்பலே நாட்டைப் பேணி வளர்த்தல், விளையாடுமிடங்களே பள்ளிக்கூடங்களின் சுவாசகோசங்களாவன. விதிகளையனுசரித்த பந்தய விளையாட்டுகள் பாடசாலை வாழ்க்கையின் மூச்சுப்போன்றது. எல்லா நற்குணங்களுக்கும் உடல் வலிமை ஆதாரம். நம் சிறுவர்களுக்குச் சுகாதாரக்கல்வி போதிப்பதிலுள்ள இடையூறுகளை விரித்துக்கூறும் அவசியம் ஈங்கில்லை. இடையூறுகள் பல உளவெனினும் ஏற்ற முறையில் சுகாதாரக் கல்வி புகட்டுவது நமது கடன். உடலுரன் உண்டாக்கும் சுத்தமான உணவு உட்கொள்ள வேண்டும், லாஹிரி சம்பந்தமானவற்றை உட்கொள்ளலாகாது, உணவு, பானம் முதலியவற்றில் நற்பழக்கங்கள் பெற விரும்பவேண்டும் என்னும் இவைபோன்ற விதிகளைப் பன்முறை நாம் சிறுவர்களுக்கு வற்புறுத்திக்கூற வேண்டும். ஈகையெனக் கருதாது, கடமையெனக் கருதி ஏழைச் சிறுவர்களுக்கு இரண்டாம் வேளை நம்மால் அன்னமிட இயலாதா? நம் சிறுவர்கள் உடலுரனுடனும் அழகு திகழும் மேனியுடனும் இருக்கவேண்டுமென்பது என் எண்ணம். வலிமையும் அழகும் பெறும்படி கிரேக்கர்கள் தேகப்பயிற்சி முறைகளைப் பின்பற்றியது சரித்திரத்தில் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அதனினும் சிறந்தது பண்டை ஆரியர்களின் முறை. காயம், மனம், ஆத்மா இவை மூன்றும் ஒருங்கே திகழ்ந்து மேம்பாடடையச் செய்யும் தன்மையன அவர்கள் பழக்கங்களும், கல்வி முறையும். கிரிக்கெட், பந்து விளையாட்டுப்போன்ற மேனாட்டு விளையாட்டுகள் ஒரு சிறிது தன்மை பயக்கத்தக்கனவே; என்றாலும் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் ஆசாரத்திற்கும் ஏற்ற தேகப்பயிற்சி முறைகளைக் கையாளுவதென்றால் வேண்டாம் என தடுப்பாரில்லையே, எழுதிப்பார்த்தால் தேகப்பயிற்சி முறை வெகு நன்றாக இருக்கலாம், ஆசாரத்திற்கு அதனைக்

கொண்டுவந்து அதனால் நற்பயன் பெறவேண்டுமென்றால் தேகப்பயிற்சி செய்விக்கும் உபாத்தியாயர்களோடு மற்ற உபாத்தியாயர்கள் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டும். இத்தொழிலைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவரும் சிறுவருடன் கலந்து விளையாடும் சக்தி பெற்றிருப்பது அவசியம். நல்லாசிரியர் எவர்க்கும் அப்படிச் செய்வதினும் சிறந்த ஆனந்தம் வேறுண்டோ? அன்றியும் இத்தகைய கலப்பால் சிறுவரின் மனப்பான்மையை நேரில் அறிய உபாத்தியாயர்களுக்கு அவகாசம் உண்டாகுமன்றோ?

## நல்லாசிரியன் இலக்கணம்

ஆசிரியத் தொழிலுக்கு தற்பொழுது பொதுஜனங்கள் போதிய மதிப்புத் தரவில்லை. இது துக்கிக்கத் தகுந்தது. பெரும்பாலோர் தமது உயர்ந்த பதவியிலிருந்து ஆசிரியர்களிடம் அனுதாபம் காண்பிக்கிறார்கள். இச்செயல் நம்மை புண்படுத்துகிறது. குற்றம் நமது ஆதலால் பிறரைப்பழிப்பது பயனற்றது. தொழில் சம்பந்தமான இடையூறுகள் பள்ளிக்கூடங்களில் போதிய கருவிகள் இல்லாமை, மாணவரின் ஏழ்மை; சம்பளக் குறைவு பொதுமக்களின் சிரத்தைக் குறைவு; அரசாங்கத்தாரின் உதாசினம் ஆகிய இவைபோன்ற பல உள. இடையறாமல் இவற்றைச் சிந்தித்து வருந்துவதில் ஒரு பயனுமில்லை. கச்சத்தை இழுத்துக் கட்டி நம் உழைப்பால் இத்தாழ்ந்த நிலையினின்றும் நம்மை உயர்த்திக் கொள்ளவேண்டும். கல்வி முறையின் முக்கிய அம்சம் ஆசிரியர். நல்லாசிரியர், தம் கடமைகளைக் கடவுளால் தரப்பட்டனவென நினைத்து ஒழுகுவார்; மாணவருக்கு உதவியாளராயும், வழிகாட்டியாயும் நடப்பார். தம் மாணவனைத் தம் மகனாகவே ஸ்வீகரித்து மேலுக்குத்தான் ஆசிரியரெனக் காட்டிக்கொண்டு உண்மையில் சிறியோனிடம் குடிகொண்டுள்ள தெய்வத்தன்மையை நினைந்து ஒழுகுவார். அத்தன்மையோர் தமக்கென வாழா மாணவர்க்குரியாளர். மாணவரோடு லயப்பட்ட நல்லாசிரியர் மாணவரின் சேர்க்கையால் புத்துயிர் பெற்று இளமை தளராது எக்காலமும் பரந்தநோக்கத்துடன் வாழ்வார். வயது முதிர்ந்தாலும் அன்னோர் கால வித்யாசத்திற்கேற்றவாறு ஒழுகும் தன்மையராய் யௌவனம் பெற்றுத் திகழ்வார். காலக்கூற்றால் நரம்பெழுந்துலரலாம், ஆயினும் ஆன்மாவிற்கு வயது முதிர்ச்சி இல்லை. அவர் கடந்ததை நினைந்து வெகுளார்; எதிர்காலத்தை நினைந்து நோவார். இன்றே செய்ய வேண்டும் நன்றென்றிருப்பார். தொழிற் கடமைகளைச் செலுத்துவதில் தம் உடலையும் ஆவியையும் தந்து களிப்பார். ஆசிரியரின் தொழிற் சிறப்பையும், பெருந்தன்மையையும் நன்குணர்ந்தவர் ஆதலால் எவ்வளவு பெரியவராயினும் அவரைப் பெருமிதத்தால் ஆசிரியர் ஏறிட்டுப் பார்ப்பார். தன் உழைப்பின் பயனால் பெற்றதைக்கொண்டு உவப்பார்; சோம்பல் கொண்ட தனிகரிடமாயினும், அதிகார கர்வங்கொண்டவரிடமாயினும் முழந்தாளிட்டுப் பிச்சைக்காரனைப்போல் பொருளுதவி நாடார்.

தன்னுழைப்பும், தன் மதிப்புமே அத்தன்மையோரின் குறிக்கோள்கள்; அவற்ருல் பெறும் சக்திகொண்டு தம்மைத் தாமே உயர்த்திக்கொள்வார். நல்லாசிரியரின் ஒவ்வொரு செயலும் கடவுள் வணக்கத்தைச் சார்ந்தது; அஃது நற்கதி நாடிய அற்பணம்; பேரானந்தம் தரத்தக்கது. மனச் சாட்சித் திருமுன், திறமையுடனும், ஆர்வத்துடனும் நாடோறும் அவர் தம் கடமைகளைச் செலுத்துங்கால் அவரறியாவண்ணம் ஒரு தேஜஸ் அவரிடம் தோன்றும். அந்த தேஜஸ் தோன்றியபின் என்றும் அவரை விட்டகலாது. இவ்வாறு தம்மையணுகிய மாணவரை அறிவுபெற்ற மானிடராக்கிப் பயன் தரும் வாழ்க்கையைப் பெறும்படி செய்து அவர்களிடம் மறைந்து கிடந்த ப்ரம்ம ஸ்வரூபத்தை வெளிப்படுத்துவார். இவ்வரிய செயலுக்குக் கைம்மாறு யாது? கடவுளாணையால் ஏற்பட்ட தொழிலின் கடமைகளைத் திருத்தமாகச் செய்வதினுல் உண்டான மன எழுச்சி உல்லாசம், சாந்தி. இது வர்ணனைக்கு அடங்காது. அனுபவித்துணர வேண்டுவதொன்று. சுருங்கச் சொல்லின் உண்மையான சிரத்தையுடன் ஆசிரியர் தம் கடமைகளைச் செய்வாராயின், அவ்வறத்தின் பயனுப்ப் பிற சாதனங்களின்றியே முக்தி பெறலாம். அதனினும் சிறந்தது வேறு உண்டோ?

## ஆசிரியச் சங்கங்கள்

நல்லாசிரியன் இலக்கணமும் நமது ஒழுக்கமும் மலைக்கும் மடுவுக்கும் போலுள்ளன. நம்மில் பெரும்பாலோர் வேறு ஜீவனோபாயமின்றி ஆசிரியத் தொழிலை மேற்கொண்டுள்ளோம்; எனினும் இதனைத் தழுவிய பின் இயன்றவரைத் தொழிற் சிறப்பைப் பாராட்டக் கடவோம். பணி செய்து கிடப்பதே நம் கடனெனக் கொள்ளவேண்டும். ஏற்றத் தாழ்வின்றி ஒரு கலாசாலையைச் சேர்த்த ஆசிரியரனைவரும் கூடிச் சேவா சங்கமாகவேண்டும். நமது குறைகளைக் களைந்து, குறுக்கோள்களையுணர்ந்து, நம்மை அணுகும் சிறியோர்களுக்கு உள்ளன்புடன் உழைக்கும் மனப்பான்மையை நாம் பெரவேண்டும்.

பயனற்ற சர்ச்சைகளில் காலங் கழித்தல் இழுக்கு. கல்வி சம்பந்தமான விஷயங்களில் பிறருக்கு வழிக்காட்டல் ஆசிரியரின் பிறப்புரிமை. கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக அவ்வுரிமையை இழத்தலாகாது. ஆசிரியரின் ஒழுக்க முறையை வரையறைந்து கூற இயலாது. ஆசாரத்தினுல் திகழும் முறையே எழுதப்பட்டுள்ள கோட்பாட்டினும் சிறந்தது. எந்த அளவுக்கு ஆசிரியச் சங்கங்கள் மெய்யன்புடன் தங்கள் கலாசாலைக்குத் தொண்டு செய்கின்றனவோ அந்த அளவுக்கே புத்துயிர் பெறும் நம் நாடு முன்னேற்றமடையும்.

## பெற்ரேரின் ஒத்துழைப்பு

உண்மையில் நாம் பெற்ரேரிடமிருந்தே ஊதியம் பெறுகிரேம். இதனை ஒருபோழ்தும் நாம் மறத்தலாகாது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கு நாம் என்ன செய்திருக்கிரேம் என்பதைப் பெற்

ற்றோர்களுக்கு மெய்ப்பிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். கலாசாலைகளி லுள்ள குற்றங்களைப் போக்க மருந்து ஒன்றேயுளது. அஃதே பெற்றோ ரின் ஒத்துழைப்பு, மாணவரின் நன்மையை நாடி, அவ்வொத்துழைப்பை ஆசிரியர் வலியத் தேடுதல் நலம். மாணவர்களின் பயிற்சியைப் பற்றிப் பெற்றோர்கள் அசிரத்தையா யிருக்கிறார்கள் என்று எண்ண இடமில்லை. ஆசிரியர்களுக்குப் பெற்றோர்கள் விரோதமாக இருக்கிறார்கள் என்று நினைப்பது தவறு. சிறுவர்களின் முன்னேற்றத்தையும் நலனையும் நாடியே ஆசிரியர்கள் உழைக்கிறார்கள் என்ற உறுதியான எண்ணம் பெற்றோர்கள் மனத்தில் தோன்றினால், அவர்கள் வாக்காலும், பொரு ளாலும் ஆசிரியர்களை உவந்து ஆதரிப்பார்கள்.

## பள்ளிக்கூட அதிகாரிகள்.

பள்ளிக்கூட அதிகாரிகள், எவ்வகையினராயினும், கல்வி விஷய மாய் மிக்க பொறுப்புடையவர்கள். அவர்கள் தங்கள் கடமைகளை ஜாக்ரதையுடனும், திறமையுடனும், அனுதாபத்துடனும், நிர்ப்பக்ஷபாத மாகவும் செலுத்தவேண்டும். அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே எஜமானன் ஊழியன் என்ற சம்பந்தமில்லை. அது தோன் றும்படி ஒன்றும் செய்யக்கூடாது. தகுதியான ஆசிரியர்களை நியமித்த பின், கல்விக் குறிக்கோள்களை அனுபவத்திற்குக் கொண்டுவர ஆசிரியர் களுக்குப் பூர்ணஸ்வதந்திரம் கொடுக்கவேண்டும். வேறு உத்யோகஸ் தர்களைவிட ஆசிரியர்கள் கலாசாரம், அறிவு, ஒழுக்கம், தன் மதிப்பு, பெருமிதம் ஆகிய இவற்றுள் சிறிதும் தாழ்ந்தவர்கள் அல்லர்; ஆதலால் அதிகாரிகள் ஆசிரியர்களைத் தங்களுக்குச் சமமான அந்தஸ்துடையவர் களாய்ப் பாவிக்க வேண்டும்.

## உத்தியோகக் கடமை

ஆசிரியர்கள் தத்தம் பள்ளிக்கூட வேலைகளில் முழு கவனத் துடன் ஈடுபட்டுள்ளவராயினும், பொதுவாக உத்தியோகத்திற்குச் செலு த்தவேண்டிய கடமைகளைப் புறக்கணித்தலாகாது. சென்ற முப்பது ஆண்டுகளாக ஆசிரியத் தொழிலின் சிறப்பையும், ஆசிரியரின் அந்தஸ் தையும் உயர்த்த ஆர்வத்துடனும் தியாக புத்தியுடனும் சில ஆசிரியர்கள் இந்தியா முழுதும் உழைத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உழைப்பின் பயனாய் நலன் விளைந்துள்ளது. ஈண்டு இம்மகாநாட்டின் சார்பாகவும் என் சார்பாகவும், அன்னோரனைவர்க்கும் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். தென் இந்திய ஆசிரியச் சங்கம் (S. I. T. U) இப் பொழுது அழகிய பெரும் கட்டடமாயிருக்கிறது. இது சிறுகச் சிறுக எழுப்பப்பட்ட கட்டடம். நம் நாட்டில் ஆசிரியச் சங்கங்களுள் சிறந்த தொன்றென இது கருதப்படுகிறது. அதையறிந்து நாம் எல்லோரும் பெருமைப் படவேண்டும். குறையொன்றில்லா மானிடச் செயலில்லை. ஆதலால் இச்சங்கத்திலும் ஏதேனும் குறைகளிருக்கலாம். எனினும்,

இதில் குற்றம் பார்ப்போர், தம் குற்றத்தையே காண்போராவர். ஏனெனில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் இதனிடம் உரிமை உண்டு; இதை ஆசிரியரின் குறை நிறைகள் திரண்டதோர் உருவமெனலாம். ஒவ்வொரு ஆசிரியரும், இந்த உத்தியோகத்தைத் தழுவியதாலேயே, இச்சங்கத்தின் தள்ளவொண்ணு அங்கத்தினராதல் வேண்டும். அவ்வெண்ணம் கைகூட நாமெல்லோரும் இடைவிடாதுழைக்க வேண்டும்.

நம் தொழிலுக்கெனத் தனித்ததோர் உடை, அறிகுறி, கொடி ஏற்படுத்திக்கொள்வது அவசியம். இடை இடையே நம் கூட்டத்தார் ஒன்றுசேர்ந்து த்வஜாரோஹணம் செய்து வணங்கவேண்டும். வெளித்தோற்றத்தில் ஒன்றுபோலிருந்தால் அடிக்கடி தொழில் முறைப்படி நாமெல்லோரும் சஹோதரர்கள் என்ற எண்ணம் ஞாபகத்திற்கு வரும். வெவ்வேறு மதங்களும், பழக்க வழக்கங்களும் கொண்ட நம் நாட்டில் இவ்வாறு செய்யத் துணிதல் எளிதன்று. இதற்கேற்ப முழுமையும் நடக்க இயலாதாயின், கூடியமட்டும் வெளிப்படையான வித்தியாசங்களைக் குறைத்துக்கொள்வது நலம்.

ஆசிரியர் தங்கள் சங்கங்களில் கல்வி சம்பந்தமான ஏதேனும் ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றி விவாதித்து தம் துணிபுகளை வெளியிடலாம். நூதன முறைகளைக் கையாண்டு தம் அனுபவ சித்தாந்தங்களைப் பிறருக்கு அறிவிக்கலாம்.

தனித்தும், கூட்டத்தாராகவும் நமது சங்கத்தின் பொருள் வருவாயைப் பெருக்கலாம். சோற்றுத் துணிகளுக்குக் கஷ்டப்படும் எளிய சஹோதர ஆசிரியர்களிடமிருந்து நாம் பணம் ஒன்றும் எதிர்பார்க்கமுடியாது. எனினும் அன்னேர் பலர் தம் சக்திக்கு மிஞ்சிச் சிலவேளைகளில் பொருளுதவி செய்வதை நாம் காண்கிறோம். ஆனல் நம்மில்பெரும் சம்பளக்காரர்கள் சம்பளத்திற்கேற்பச் சந்தா செலுத்தியோ, மொத்தமாக ஏதேனும் பணம் கொடுத்தோ சங்கத்திற்குப் பொருளுதவி செய்யலாம்.

பொருள் நிலையை மேம்படுத்த மற்றோர் நல்ல வழியும் உண்டு ஆசிரியர்களிடம் நடிக்கும் சக்திக்கோ, சங்கீத ஞானத்திற்கோ பஞ்சமில்லை. ஜில்லா சங்கம் வருஷத்திற்கொரு முறையாயினும், நாடகமோ, சங்கீதக் கச்சேரியோ நடத்தி அதில் கிடைக்கும் வரும்படியில் பாதியைத் தாம் வைத்துக்கொண்டு மற்றதைத் தென் இந்திய ஆசிரியச் சங்கத்திற்குத் தரலாகாதா? இத்தகைய செயல் சங்கத்தின்கண் ஒருவருக்குள்ள பற்றுக்கு உறைகல். அவசியம் செய்தே ஆகவேண்டும் என்ற உறுதி தோன்றுமாயின் ஆகாததொன்றில்லை.

பல்வகைப்பட்ட கடமைகளைத் திறனுடன் தெ. இ. ஆ. சங்கம் செய்ய வேண்டுமாயின் போதிய பொருள் திரட்ட முயலவேண்டும்.

இச்சங்கத்திற்குப் போதிய சம்பளம் பெற்ற உத்தியோகஸ்தர்களைக்கொண்ட காரியாலயம் வேண்டும். சங்கத்தின் காரியதரிசியும்

அவருடன் உழைப்பாளரும் உலகியல் அறிவோடு பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் அவாவும் ஆசிரியத் தொழிலை சிறப்பிக்குந் திறமையும் பெற்று விளங்கவேண்டும். சங்கத்தின் சஞ்சிகை ஆசிரியரின் அபிப்ராயங்களைத் திறமையுடன் வெளியிடல் வேண்டும். அக்காரியாலயத்தில் பல இலாகாக்கள் இருக்கவேண்டும். ஒவ்வொரு இலாகாவும் தனித்தவோர் விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து அதன் முடிவுகளைப் பொதுஜனங்கள் அறியும் வண்ணம் வெளியீடுகளைப் பிரசுரிக்கவேண்டும்.

தெ. இ. ஆ. ச. ஒரு மாடல் ஸ்கூல் (Model School) ஸ்தாபிக்க வேண்டும். அது பெயர்மட்டில் 'மாடல்' என்றிராமல் உண்மையில் பிறர் பார்த்து அதன்படி பள்ளிக்கூடங்கள் நடத்தத்தக்க முறையில் அமைந்துள்ளது என்று தோன்றும்படி இருக்கவேண்டும். பள்ளிக்கூடத்தைச் சார்ந்த டிரைனிங் செக்ஷன் (Training Section) ஒன்று இருக்கவேண்டும். இவ்வாறு பல வழிகளில் உழைத்தால் கல்வித் துறையில் நமது சங்கம் தன் நிகரில்லாச் செல்வாக்குடையதாகும், அப்பொழுது அதன் அபிமானத்தையும் ஆதரவையும் அரசாங்க நிர்வாகத்தை நாடும் கக்ஷிகள் பெற விரும்பும். எனவே இப்பொழுதுள்ள நிலைக்கு நேர் மாறுதலாக விருக்கும். இத்தகைய நிலையை அடைவது நம்மிடமே இருக்கிறது.

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | |
|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# செய்தித் திரட்டு

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

13—4—43-ல், ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு, விசேஷ பஜனையும், சம்ஸ்கிருதத்தில் ஓர் போட்டிப் பரீக்ஷையும் நடைபெற்றன.

18—4—43-ல் இப்பள்ளியின் ஏழாவது ஆண்டு விழா ஜஸ்டிஸ் ஸ்ரீமான் வி. என். குப்புசாமி அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

30—4—43-ல் குழந்தைகள் தினம், உபாத்திமைச் சங்கம் இவைகளின் வருடாந்திர விழா கொண்டாடப்பட்டது.

## அக்பராபாட் பாடசாலை, கோடம்பாக்கம்

5—4—43-ல் இப்பள்ளிக்கூடத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவிழா, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராஜாராம் அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

30—4—43-ல் பாஷா அபிவிருத்தி சங்கத்தின் வருஷாந்திர விழா ஸ்ரீ N. S. அருணாசல அய்யர் தலைமையில் நடைபெற்றது.

## போர்டு பாடசாலை, பேராம்பட்டு, பெற்றோர் சங்கம்

4—4—43-ல் ஸ்ரீ சிவலிங்கம் செட்டியார் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. சுமார் ரூ. 100-க்கு ஒரு சிறிய கட்டிடம் கட்ட உத்திரவாயிற்று. சங்கநிதியை ரூ. 10 வீதம் பிரித்து ஏலம் விடப்பட்டது. (வட்டிக்கு).

## முனிசிபல் ஆரம்ப பாடசாலை, கொசப்பேட்டை, வேலூர்

30—4—43-ல் ஆண்டு விழா, ஸ்ரீ ராமநாத அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## நாட்டேரி போர்டு பாடசாலை, செய்யார்

6—5—43-ல் இப்பாடசாலை ஆண்டு விழா ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீ துரைசாமி முதலியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. வித்துவான் முத்து மாணிக்கவாசக முதலியார் குகப்படலம் என்பது

பற்றி சொற்பொழிவு செய்தார். மாணவிகள் 'கிருஷ்ணார்ஜுன' என்னும் நாடகத்தை நடத்திக் காண்பித்தனர்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், நாட்டரம்பள்ளி

**8—5—43**-ல் ஆண்டு விழா டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சரப கோபாலன் தலைமையில் கொண்டாடப்பட்டது. உயர்தர பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ கணபதி பிள்ளை 'ஆசிரியரும் மாணாக்கரும்' என்பது பற்றியும், ஸ்ரீராமகிருஷ்ண மடம் தலைவர் ஸ்ரீ சுவாமி கேதாரேஸ்வரானந்தஜி 'ஆசிரியர் கடமை' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். 'பேராசை பெருநஷ்டம்' என்னும் நாடகம் மாணவர்களால் நடிக்கப்பட்டது.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், முகையூர்

**17—4—43**-ல் ஆண்டு விழா, அட்வகேட் ஸ்ரீராமச்சந்திர அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மாணிக்கியப்பன் 'யுத்த முயற்சி' என்பது பற்றியும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சம்பத்தையா 'ஆசிரியர்கள் கடமை' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். மாணவர்களால் 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற யுத்த சம்பந்தமான சம்பாஷணை நடைபெற்றது.

---

### உதவிபெறும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் மானேஜர் சங்கம், நெல்லிக்குப்பம்

**18—4—43**-ல் கூடி, யுத்த காரணத்தால் விலை வாசி ஏற்றத்தை முன்னிட்டு, (1) ஸ்டேஷனரி கட்டிட கிராண்டு கொடுக்கும்படியும், (2) ஆஜரை 20-லிருந்து 16-க்கு குறைக்கும்படியும், (3) அடுத்த ஆண்டிலிருந்து கிராண்டுத் தொகையை குறைக்காமல் மட்டுமின்றி அதிகமாயும் கொடுக்க வேண்டுமென்றும், டைரக்டர் துரையவர்களுக்குத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டன.

---

### போர்டு பாடசாலை, நெசப்பாக்கம், சைதாப்பேட்டை

**11—4—43**-ல் ஆண்டு விழா, ஜில்லா போர்டு கல்வி யதிகாரி ஸ்ரீ பொன்னுரங்கம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. பலர் சொற்பொழிவாற்றினர்.

---

### ஸி. என். இந்து அனாதை ஆச்ரமம் ஆரம்ப பாடசாலை, காஞ்சீவரம்

**2—5—43**-ல் ஸ்தாபகர் தினமும், வருஷாந்திர விழாவும், கொண்டாடப்பட்டன. ஸ்ரீ K. வெங்கடசாமி நாயுடு தலைமை வகித்தார்.

ஸ்ரீமதி டாக்டர் சாரதாபாய் குழந்தைகளுக்குப் பரிசுகளை அளித்தார். பல பிரமுகர்களும் வந்திருந்து குழந்தைகளால் நடத்திக் காட்டப்பட்ட உடற்பயிற்சி, ஆடல்பாடல், மாஜிக் முதலியவற்றை அனுபவித்தனர். தலைவர் இவ்வாச்சிரமத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்.

---

### இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

28—4—43-ல் சென்னை அசோசியேடட் ஏஜன்ஸி உரிமையாளர் ஸ்ரீ அரங்கலால் ஜ்யோதியாவும், விரதச்சாரி கழக சர்வாதிகாரி ஸ்ரீ சஞ்சீவ காமத்தும் விஜயம்செய்து பாடசாலை அலுவல்களைப் பாராட்டினர்.

2—5—43-ல் தமிழ் உலகம் பத்திரிகாசிரியர், சாமி சண்முகாநந்தாவும், உரிமையாளர் ஸ்ரீ பார்த்தசாரதி முதலியாரும், குடும்ப சமேதம் விஜயம்செய்து மகிழ்ந்தனர்.

9—5—43-ல் இப்பாடசாலையின் 27-ம் ஆண்டு விழா, பாரததேவி ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், மேல்பாடி

17—4—43-ல் ஆண்டு விழா, ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஆசீர்வாதம், தாய்மொழியைப்பற்றியும், ஸ்ரீ நடன சபாபதி பிள்ளையும், ஸ்ரீராமலிங்கம் பிள்ளையும், கல்வி என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

### ஸெயின்ட் மேரீஸ் உயர்தர எலிமெண்டரி பாடசாலை, கொளப்பலூர்

25—4—43-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பசுபதி பிள்ளை தலைமையில், பெற்றோர் சங்கம், சுகாதார வார கொண்டாட்டம், பரிசளிப்பு விழா, வேனீஸ் வர்த்தகன் நாடகம், விவசாய பொருட் காட்சியும் நடைபெற்றன. தலைவர் பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

---

### போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், கோயம்புத்தூர்

1—5—43-ல் மூன்றாவது மகா நாடு, ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீராமலிங்க கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ M. S. சுந்தரேசுவரன் 'ஆசிரியர்களின் நிலைமை' என்பதுபற்றிப் பேசுகையில் மற்ற இடங்களில் யுத்த அலவன்ஸ் கொடுக்கப்பட்டிருந்தும் இச் ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்கு மட்டும் கொடுப டாமலிருப்பது வருந்தத் தக்கதென்றும் ஜில்லா போர்டார் எவ்விதத்திலாவது பணம் பெற்று ஆசிரி

யர்களுக்கு யுத்த அலவன்ஸ் கொடுக்கவேண்டியது கடமை என்றும் விரிவாகப் பேசினர்.

---

## உடுமலைப்பேட்டை தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், கொமரலிங்கம்

2—5—43-ல் ஜனரல்பாடிக் கூட்டம் நடைபெற்று, நிர்வாக சபையும், உத்யோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## போர்டு பெண் பாடசாலை, T. வாடிப்பட்டி

10—4—43-ல் பெற்றோர் சங்கத்தின் வருஷாந்திர விழா, ஆண் பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவிகளால் ‘மார்க்கண்டேயர்’ நாடகம் நடிக்கப்பட்டது. பெண் கல்வி என்பதுபற்றி ஓர் மாணவியால் வியாசம் படிக்கப்பட்டது. தலைவர் பெற்றோர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி விரிவாகப் பேசினர்.

---

## மேலூர் தாலூகா ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகள் யூனியன், கருங்கலக்குடி.

18—4—43-ல் மகா சபைக்கூட்டம், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஜனப் குலாம் தஸ்தகீர் சாகிப் பகதூர் தலைமையில் நடைபெற்றது. மேலூர் வக்கீல் ஸ்ரீ நல்லமணி அம்பலகாரர் ‘தற்கால யுத்தமும் ஆசிரியர் ஆசிரியைகளின் கடமையும்.’ என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## ஹிந்து எலிமெண்டரி பாடசாலை, வத்தருயிருப்பு.

21—4—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராஜேந்திரன் தலைமையில் மாணவ மாணவிகளுக்கு ஓர் விளையாட்டுப் பந்தயம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர் விளையாட்டுப் பந்தயங்களால் குழந்தைகளுக்கு உண்டாகும் உற்சாகம், நன்மைகள் முதலியவற்றைப்பற்றிப் பேசினர்.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, ஏத்தாப்பூர்.

6—4—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கரநாராயணய்யர் தலைமையில், மாணவர்கள்/பெற்றோர்கள் சங்கங்களின் ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன. மாணவிகளால் ‘நெல் பயிரிடல்’ என்ற நாடகக் காட்சி நடிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் ஸ்ரீ வெங்கட சுப்பிரமணியம் ‘சங்கங்களின் பயன்’ என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

நாட்டாண்மைக்கழக உயர்தரத் துவக்கப்பள்ளி, செந்தாரப்பட்டி.

18—4—43-ல், ஸ்ரீ சங்கரநாராயணய்யர், D. I., தலைமையில், கலைமகள் மாணவர் சங்க இளைஞர் செஞ்சிலுவை சங்க ஆண்டு விழாக்கள் நடைபெற்றன. ஸ்ரீ முனுசாமி நாயுடு, P. A. to D. E. O., 'யுத்தமும் மாணவர் கடமையும்' என்பது பற்றிப் பேசினார். மற்றும் செஞ்சிலுவை சங்கம், கம்பராமாயணம்—பாலகாண்டம், பற்றியும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

---

போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, கெங்கவல்லி.

25—4—43-ல், குமரன் மாணவர் தமிழ்க்கழகத்தின் 5-வது ஆண்டு விழா ஸ்ரீ சங்கர நாராயணய்யர் தலைமையில் கொண்டாடப் பட்டது. மாணவர்களால் 'வீரத்தாய்' என்னும் நாடகம் நடிக்கப் பட்டது. ஸ்ரீ. குருசாமி அய்யர் 'மாணவர்களும் எதிர்காலமும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, பெத்தநாயக்கன் பாளையம்.

1—5—43-ல், ஆசிரியர் சங்க ஆண்டுவிழா, ஸ்ரீ சங்கர நாராயணய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களால் தயாரிக்கப் பட்ட போதனா முறை உபகரணங்களின் காட்சிசாலை ஒன்று நிறுவப் பட்டது. தேனீ வளர்த்தல், கைத்தொழில், சாரணீயம், கவியின் சொல் நயம், செய் முறைக் கல்வி, சங்கீதம் ஆரம்ப பாடசாலைகளில், என்பவைகளைப் பற்றிப் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

---

உயர்தர ஆரம்ப பாடசாலை, தேத்தாகுடி.

26—4—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வேணுகோபால அய்யர் தலைமையில் பெற்றோர் சங்கம் கூடிற்று. பல பிரமுகர்கள் வந்திருந்தனர். ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ ராஜாராமய்யர் 'முதியோர் கல்வியும் அதன் அவசியமும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் பெற்றோர் சங்கமும் அதன் அவசியமும் என்பதுபற்றி விரிவாகப் பேசினார்.

---

டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்.

24—4—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி முதலியார் தலைமையில் கூடிற்று. தலைவர் சரித்திரம் போதித்தல் என்பதுபற்றி விரிவாகப் பேசினார். சங்கத் தலைவர் ஸ்ரீ வெங்கட்டராமய்யர், சரித்திர பாடங்களில் போதிக்கும் முறை, படத்தில் குறிப்பிடுவது மிகவும் அவசியம் என்பதும், ஜமீன்தார் நிலவரித்திட்டம், முதலிய விஷயங்களைப் பற்றியும் பேசினார்.

---

முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன், தஞ்சாவூர்.

29—4—43-ல் நான்காம் ஆண்டு விழா, K. H. School, உதவி ஆசிரியர் ஸ்ரீ பாலகிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப்பட்டது,

கரந்தை உமாமகேஸ்வர ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் ஆரம்பக்கல்வியின் அவசியம் என்பது பற்றிப் பேசினார். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கட்டராமய்யர் ஆசிரியர்களின் கடமைகளைப் பற்றிப்பேசினார். தலைவர் முடிவுரையில் நம் நாட்டில் ஆரம்பக்கல்வி விருத்தியாக ஆசிரியர், பெற்றோர், சர்க்கார், ஒன்றுபட்டு விரைவில் கட்டாயக் கல்வியை ஆரம்பிக்கவேண்டுமென்றும், ஆரம்பக் கல்விக்கு உதவி அதிகம் அளிக்கவேண்டுமென்றும் ஆசிரியர்களும் புதுமுறைகளை உணர்ந்து கற்பிக்க வேண்டியது அவசியமென்றும் விளக்கிக் கூறினார்.

---

### லக்ஷ்மி விலாஸ் உயர்தர பாடசாலை, நீடாமங்கலம்.

6—5—43-ல் 24-வது ஆண்டு விழா டிப்டி தாசில்தார் ஸ்ரீ ராமச்சந்திர நாயுடு தலைமையில் கொண்டாடப்பட்டது. ஏராளமான பெற்றோர்களும், பிரமுகர்களும், வந்திருந்தனர். டிவிஷனல் ஆர்கனைசர் ஸ்ரீ நடராஜ பிள்ளை 'பெற்றோர் கடமை' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் 'வீரத்தாய்' என்ற நாடகத்தை நடித்தனர்.

---

### பஞ்சாயத்து போர்டு பாடசாலை, பழமார்நேரி.

1—5—43-ல் மாணவ மாணவிகள் சங்க ஆண்டு விழா, திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கல்யாணராம அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம், ஆடல் பாடல்களாலும், 'பக்த குசேலா' என்ற நாடகத்தை நடித்தும் வந்திருந்த பெற்றோர்களையும் பிரமுகர்களையும் மகிழ்வித்தனர். தலைவர், மாணவ மாணவிகளுக்குச் சிறந்த புத்திமதிகளைக் கூறினார். இரவில் திருவிசநல்லூர் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளால் ஓர் விகடக் கச்சேரி நடைபெற்றது.

2—5—43-ல் பெற்றோர் சங்க 4-வது ஆண்டு விழா, ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கட்டராமய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகள் ஆடல் பாடல்களில் தங்கள் திறமைகளைக் காட்டியும் ஸ்ரீ கிருஷ்ண லீலா என்ற நாடகத்தையும் நடித்துக் காட்டினர். தலைவர் பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், திசயன்விளை.

24—3—43 தேதியில், கல்வி இலாகா டைரக்டர் துரையவர்களுக்கு, யுத்தப்படியை ரூ. 6 ஆகக் கொடுக்கும்படியும், சராசரி ஆஜர் 20 இருக்க வேண்டுமென்ற விதியை யுத்தம் முடியும் வரை நிறுத்தி வைக்கும்படியும் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது.

---

### கரூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன், வாங்கல்.

1—5—43-ல் இரண்டாவது ஆண்டு விழா, ஸ்ரீ மருதமுத்து, ஜில்லா போர்டு மெம்பர், தலைமையில் கொண்டாடப்பட்டது ஸ்ரீ ஏ. வி. சந்திரசேகரய்யர் 'ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்கள்' என்பது பற்றியும், ஸ்ரீ. T. வைத்தியநாத ஸ்வாமி அய்யர் 'ஆரம்பக்கல்வி' விஷயமாகவும் சொற்பொழிவு ஆற்றினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, மணப்பாறை.

1—5—43-ல், மாணவர் சங்க ஆண்டு விழா, ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ வெங்கடாசலம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வீரராகவய்யர் போட்டிப் பந்தயங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கினர். முசிரி தமிழ் பண்டிதர் ஸ்ரீ ராமசுப்பையர் 'இளமையும் கடமையும்' என்பது பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். மாணவர்கள் 'பக்த பிரஹ்லாதா' என்ற நாடகத்தை இனிது நடித்துக் காட்டினர்.

### ஸ்ரீ சரஸ்வதி எலிமெண்டரி பாடசாலை, சீனிபூர்

9—5—43.ல் பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக மாணவர்களால் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கர சுப்பையர் தலைமையில் 'புலவர் கர்வ பங்கம்' என்னும் நாடகம் விமரிசையாக நடிக்கப்பட்டது. திரளான ஜனங்கள் வந்திருந்தனர்.

10—5—43-ல் ஷை சங்கர சுப்பையர் தலைமையில் மூன்ருவது பெற்ரோர் சங்க ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. தலைவர் முகவுரையில் பெற்ரோர்களின் உதவியாலும் ஊக்கத்தாலும் இப்பாடசாலை முன்னேறி வருவதால் மேலும் ஊக்கம் காட்டி இதை உயர்தர ஆரம்ப பாடசாலையாக மாற்ற முயற்சிக்க வேண்டுமென்றும், பின்னுரையில் இச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களின் வேலைகளைப் புகழ்ந்தும் பேசினர்.


## நமது புதிய பிரசுரங்கள்

**பூவர்ணனை** BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T. (Dip. Geo.)

4-ம் வகுப்புக்குரியது விலை அ. 10. 5-ம் வகுப்புக்குரியது விலை அ. 10½.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 13; அணா 15; அணா 15.

**இந்து தேச சரித்திரம்** BY S. திருவேங்கடாச்சாரி, M.A., L.T.,

4-ம் வகுப்புக்குரியது விலை அணா 5. 5-ம் வகுப்புக்குரியது விலை அணா 6.

**அங்க கணிதம்** BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியநாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி S. ராஜையைர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

**Book I for Form I 0—12—0 ; Book II for Form II 0—14—0**
**Book III for Form III 0—14—0**

**P. வரதாச்சாரி அண்டு கம்பெனி**

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை.

## வெங்கட்ராமா அண்டு கம்பெனி

**பிரசுரகர்த்தர்கள் :: எஸ்பிளனேட், மதரூஸ்**

கீழ்க்கண்ட புத்தகங்கள் எல்லாம் சென்னை துரைத்தனத்தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டவை.

1. தமிழ் சுடர் வாசகம்
   S. G. கணபதி அய்யர், B.O.L,
   Miss M. மாசிலாமணி அம்மையார் M.A., L.T.
   I முதல் VIII வகுப்பு வரை
2. ஆரம்ப கணிதம்
   M. சோமசுந்தரம், B.A., L.T.
   III முதல் V வகுப்பு வரை
3. இயற்கைப் பாடமும், தோட்ட வேலையும்
   S. V. தர்மராஜசிவா
   IV முதல் VIII வகுப்பு வரை
4. இந்துதேச சரித்திரம்
   P. சுப்பையா
   IV முதல் V வகுப்பு வரை
5. இந்துதேச சரித்திரம்
   D. வெங்கிடராமன்
   VI முதல் VIII வகுப்பு வரை
6. பாலர் கை வேலை
   D. K. நந்திகேசுவரன்
   III முதல் V வகுப்பு வரை
7. தமிழ் மொழிப் பயிற்சிகள்
   III முதல் V வகுப்பு வரை
8. தமிழ் நீதி கதா வாசகம்
   P. K. ஸ்ரீனிவாஸாச்சாரியர்
   I முதல் V வகுப்பு வரை
9. ஆரம்ப ஆசிரியர் உதவி புத்தகங்கள்
   I முதல் V வகுப்பு வரை
10. தமிழ்ச் சிறுவர் இலக்கணம்
    V வகுப்பு

இக் காகித பஞ்ச காலத்திலும் நாங்கள் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான அளவுக்கு எல்லா புத்தகங்களையும் தயாரித்து வைத்திருக்கிறோம். தங்களுக்குத் தேவையான புத்தகங்களை சப்ளை செய்ய தயாராக இருக்கிறோம். சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருப்பதற்காக தங்களுடைய ஆர்டரை முன் கூட்டியே அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

புதிய பாடத் திட்டத்துக் கேற்ப இயற்றிய

## எமது புதிய புத்தகங்கள்

**எமது தமிழ் புத்தகங்கள்**

### நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B.A., L.T.,

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் .... | அணா | 2½ |
| இரண்டாம் புத்தகம் .... | ,, | 3½ |
| மூன்றாம் புத்தகம் .... | ,, | 4½ |
| நான்காம் புத்தகம் .... | ,, | 5 |
| ஐந்தாம் புத்தகம் .... | ,, | 6 |

**எமது கணித புத்தகங்கள்**

### புது முறை கணிதம்

ஆசிரியர்

M. S. சுந்தரேச்வரன், M.A., L.T.,

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் .... (ஆறும் வகுப்பிற்குரியது) | அணா | 1( |
| இரண்டாம் புத்தகம் .... (ஏழாம் வகுப்பிற்குரியது) | ,, | 12 |
| மூன்றாம் புத்தகம் .... (எட்டாம் வகுப்பிற்குரியது) | ,, | 12 |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

நெ. 4, பிரான்ஸிஸ் ஜோஸப்பு தெரு, சென்னை.

# பத்திராதிபர் குறிப்பு

## 33 வது மாகாணக் கல்வி மகாநாடு

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பில் மேமாதம் 10, 11 தேதிகளில் வேலூரில் 33 வது மகாணக் கல்வி மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுக்கு சென்னை ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் கே. ரங்கசாமி அய்யங்கார் தலைமை வகித்தார். மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்ட முக்கிய விஷயம் இம்மகா யுத்தத்திற்குபிறகு கல்வி திட்டம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென்பதாம். தலைவர் தம்முடைய பிரசங்கத்தில் ஆசிரியர்களின் தர்மம், ஆசிரியர் சங்கங்களின் அமைப்பும் வேலையும், மானேஜ்மெண்டுகளின் கடமை, பெற்றோர்களுடன் ஒத்துழைப்பு, கட்டுப்பாடுகள் முதலிய விஷயங்களை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். பள்ளியிலுள்ள ஒவ்வொரு பாலனையும் ஜன சமூகத்தில் ஒரு பொறுப்பு வாய்ந்த பிரஜையாகும்படி பயில வைப்பது பள்ளிக்கூடத்தின் முக்கிய கடமையாகும் என்பதை எடுத்துக்காட்டி, எவ்வகையில் அப்பயிற்சியை அளிக்கலாம் என்று தமது அனுபவத்திலிருந்து அவர் எடுத்துக் கூறியது மிகவும் பாராட்டத் தக்கது. நம் நாட்டில் ஏதோ காரணங்களைக்கொண்டு மத சம்பந்தமான பயிற்சியை பல பள்ளிக்கூடங்களில் அளிப்பதில்லை. பல மதங்களைச் சேர்ந்த பிள்ளைகள் ஒரே பள்ளியில் படிப்பதால், நமது மாணவர்களுக்கு மத சம்பந்தமான விஷயங்களை போதிக்காமல் விட்டுவிட வேண்டியிருக்கிறது. மத உணர்ச்சி மனிதனின் குணங்களுக்கு அடிப்படையானது. அதுவே தெய்வபக்திக்குக் காரணம். தெய்வ பக்தி உண்டாக்காத கல்வியின் விளைவே மேல் நாட்டில் இப்பொழுது ஏற்பட்டுள்ள யுத்தமாகும். பல மதஸ்தர்கள் ஒரு வகுப்பில் சேர்ந்திருக்க மதக்கல்வி கடினமானதே. எனினும், பல மதஸ்தர்கள் சேர்ந்து வாழ்ந்து வரக்கூடிய இவ்விந்தியாவில், எல்லா மதஸ்தர்களுக்கும் ஏற்றபடியான முறையில் மதக் கல்வியை போதிக்கும் திட்டம் தயாரிப்பது அரிதாகாது. எதேனும் ஒரு கொள்கையைத் தொடராமல், பொதுவான மதக் கல்வியை, நமது பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கு போதித்தால் நம்நாட்டிலுள்ள பல இனத்தார்களிடையே, நல்லெண்ணமும், பரஸ்பர சினேகமும், ஒற்றுமையும் எற்படும் என்று ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் குறிப்பிட்டது எல்லோராலும் கவனிக்கத்தக்கது. ஆரம்பக் கல்வி

யைப்பற்றி பேசும்பொழுது, பூர்ண கட்டாயக் கல்வி திட்டம் ஏற்படுத்தி நம் நாட்டிலுள்ள எழுத்தறியாமையை ஒழிக்க தீவிரமாய் ஒரு சரியான முறையில் முயற்சிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். வர்தா கல்வி திட்டம் நமது நாட்டிற்கு உகந்தது. அதன் தத்வத்தை அநேகமாக எல்லோரும் அங்கீகரிக்கின்றார்கள். சில மாகாணங்களில் ஆரம்பக் கல்வி வர்தா திட்டத்தையே மேற்கொண்டுள்ளது. எனவே, யுத்தத்திற்குப் பின் எல்லா மாகாணங்களிலும் இத்திட்டத்தையே அமுலுக்குக் கொண்டு வரக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். அப்படிச் செய்தால்தான் நம்நாடு புத்துயிர் பெற்று ஓங்கி சிறப்படையும் என்பதை ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்.

"தாயைக் கௌரவிக்காத குடும்பம் குடும்பமாகாது, அதுபோல் ஆசிரியனைப் போற்றுவதே அரசாங்கத்தின் முக்கிய தர்மம்" ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம், ஊழிய நிபந்தனைகள் எவ்வளவு கேவலமாயிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டி, சார்ஜண்டு கமிட்டியார் சிபார்சு செய்துள்ளதுபோல் கண்யமான சம்பள திட்டத்தை ஏற்படுத்தவும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒரேமாதிரியான சம்பள திட்டமும் வேலை நிபந்தனைகளும் இருக்கவேண்டியதின் அவசியத்தை மிக உருக்கத்துடன் வற்புறுத்தியதை துரைத்தனத்தார்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

மகாநாட்டில் பல தீர்மானக்கள் நிறைவேற்றப்பட்டன. இவைகளில் முக்கியமானது, ஆசிரியர்களின் வேலை நிபந்தனைகளை சீர்படுத்துவதைப்பற்றியும், சம்பளத் திட்டத்தைப் பற்றியுமாகும். மற்றொன்று, ஆசிரியர்களுக்கு யுத்தப்படி கொடுக்கும்படி வற்புறுத்துவதாகும். இத்தீர்மானங்களை தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் அதிகாரிகள் துரைத்தனத்தாருக்கு அனுப்பி, கூடிய சீக்கிரத்தில் சகாயமான உத்திரவு பிறப்பிக்கும்படி வற்புறுத்துவார்கள் என்று எண்ணுகிறோம்.

இம்மகாநாட்டில் பல ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். வரவேற்புக் கமிட்டியார் வந்துள்ள பிரதிநிதிகள் தங்குவதற்கும் போஜனத்திற்கும் தகுந்த வசதிகள் ஏற்படுத்தி வைத்தது மிகவும் பாராட்டத்தக்கது. காகிதப் பஞ்சத்தினால் மகாநாட்டின் முழு விவரங்களையும், இவ்விதழில் பிரசுரிக்க முடியாமைக்கு எமது வருத்தத்தைச் சந்தாதார்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS**

**BAZAAR ROAD, VILLUPURAM.**

# நீங்கள்

# இந்த நிதியில்

# சேர்ந்து விட்டீர்களா?

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

**ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்**

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.


Regd. No. M. 3473

## இந்திய தேயிலையின் அபிவிர்த்



# இந்தியா அதைத் தனக்கே சொந்த மாக்கிக்கொண்டது

வருஷத்துக்குவருஷம் தேயிலைபழக்கமுள்ளவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் ஜாஸ்தியாகிக்கொண்டேவருகிறது. பத்துகோடிபவுன் தேயிலை வருஷத்துக்கு செலவாகிறது. இன்னும் வரவர அந்த அளவு ஜாஸ்தி ஆகிக்கொண்டேவரும். இந்தியாவின் ஜனத்தொகை நாற்பதுகோடி. இதனால் தேயிலை "உபயோகிப்போரின் எண்ணிக்கை இன்னும் பெருவாரியாக வளர எவ்வளவு இடமிருக்கிறது! தேசியத்தொழில தேசியபானம் என்று சொல்லத்தக்க தேயிலை பொதுமக்கள் விருப்பத்திற்கு பாத்திரமாகிவிட்டது. இந்தியத் தேயிலையையே குடியுங்கள். உலகத்தில் இதைத்தவிர வேறு நல்ல பானமே கிடையாது.




இந்த விளம்பரத்தைக் கத்தரித்து எடுத்து உங்களுடைய பெயர் விலாசம் தொழில் முதலிய விபரங்களுடன் அனுப்புங்கள். விலாசம்: இந்தியத் தேயிலைக் கமிஷனர், இந்தியத் தேயிலை மார்க்கெட்டு விஸ்தரிப்பு போர்டு, தபால்பெட்டி நெ. 2172, கல்கத்தா. மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பினால், " தி மார்ச் ஆப் இந்தியன் டீ " என்ற புத்தகம் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். அது தேயிலைத் தொழிலைப்பற்றியும் அது எவ்வளவு உன்னதமான பானம் என்பதைப்பற்றியும் வர்ணிக்கும் புத்தகம்.

# இந்தியத்தேயிலை

## உலகத்தின் உன்னத பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK-189